

யாழ் /நாவாந்துறை

# சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம்



## 65வது ஆண்டுவிழா
## சிறப்பு மலர்
## 1949-2014

06.11.2014

# யாழ். நாவாந்துறை
# சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம்


# 65வது ஆண்டுவிழா
# சிறப்பு மலர்

1949-2014

06.11.2014


## 2014ம் ஆண்டு நிர்வாக சபையினர்

| | |
|---|---|
| தலைவர் | : அ.எமில் பிரபாகரன் |
| செயலாளர் | : இ.வில்சன் |
| பொருளாளர் | : அ.அஜித்குமார் |
| உப தலைவர் | : வ.அன்ரன் |
| உப செயலாளர் | : செ.வில்பிறட் அப்பர் |
| விளை. தலைவர் | : அ.கனிஸ்ரன் |
| விளை. உபதலைவர் | : எ.உதயகுமார் |
| | |
| நிர்வாக உறுப்பினர்கள் | : ப.செல்டன் |
| | அ.அமீலன் |
| | நீ.அன்ரனிபேளின் |
| | வ.றதீஸ் |
| | ஞா.றொக்சன் |
| | பி.யேசுறாஜன் |
| | ர.சதீஸ் |
| | |
| கணக்காய்வாளர் | : பெ.இ. அகிலநாயகம் |



**நிலையத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பங்காற்றி வரும்**
**அனைத்து உள்ளங்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.**

# யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் ஆசிச்செய்தி



யாழ்.நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 65வது ஆண்டு நிறைவில் வெளியிடப்படும் விழாமலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சமூக வளர்ச்சிப்பாதையில் பல கட்டுமாணப்பணிகளை முன்னெடுத்து சாதனைகள் புரிந்து வெற்றிக்களிப்பில் வீறு நடைபோடும் சனசமூக நிலையத்தையும், அதன் நிர்வாகத்தையும் நான் பாராட்டுகின்றேன்.

சமூகக்கட்டுமாணப்பணிகளில் கல்வி, கலை, கலாச்சாரம், விளையாட்டு, சுகாதாரம், கடற்தொழில் போன்றவற்றினூடாக சமூகத்திற்கு மனித நேயத்தின் நல் விழுமியங்களைக் கொடுத்து சமய சமூக அரசியல் வாழ்வைக் கட்டியெழுப்ப எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் பாராட்டுவது மட்டுமல்லாமல் ஆசியும் கூறுகின்றேன்.

இச்சனசமூக நிலையத்தை மையமாகக் கொண்டு விளையாட்டுக் கழகம், இளைஞர் மன்றம், மகளிர் மன்றம், மாதர் சங்கம், கல்விக்குழு, கலைக்குழு போன்வற்றை அமைத்து பணிகளை பரவலாக்குவதனூடாக சமூகத்தின் பலதரப்பட்ட மக்களையும் உள்வாங்கி பொறுப்புக்களை எல்லாருக்கும் கொடுத்து எல்லோர் தேவைகளையும் நிறைவுசெய்ய செயல்ப்படுவது பாராட்டுதற்குரியது.

இச்சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவில் எல்லோரும் ஒன்றுபட்டு சமூக முன்னேற்றத்துக்காகவும் எதிர்கால கழகத்தின் நலன் கொண்டும் செயற்பட இறைவன் காட்டும் வழியில் பயணிக்க வேண்டுகின்றேன்.

*இறைபணியில் உங்கள் ஆயர்*
**பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம்**
*யாழ் ஆயர்.*

# பங்குத்தந்தை அருட்பணி பா.பி. இராசசிங்கம் அவர்களின் ஆசிச்செய்தி



சென்நீக்கிலஸ் சனசமூக நிலையத்தினர் அதன் ஸ்தாபகத்தின் 65வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் பங்குத்தந்தையாகிய நானும் அவர்களை வாழ்த்தி ஆசிர் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாவாந்துறை சமூகக் கட்டமைப்புக்களுள் சனசமூக நிலையமும் அதன் நிர்வாகமும் முக்கியமானதொன்றாகும். ஆன்மீகம், கலை, கலாச்சாரம், விளையாட்டு, ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றை மிகவும் கன்னியமாகக் கடைப்பிடித்து சமூக மேம்பாட்டைக் கருத்திற்க்கொண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது அவை பாராட்டுதற்குரியது.

அன்றிலிருந்து இன்றுவரை அதன் செயற்பாடுகள் அனைத்தும் ஆலயத்தை மையமாக வைத்தே முன்னெடுக்கப்படுகின்றன. எந்தச் செயலை முன்னெடுத்தாலும் அதற்குப் பக்க பலமாக பாங்குத்தந்தையை நாடுதல் சிறப்பு மிக்கதொன்றாகும். குருத்துவத்தை மதித்து செயல்படுவது இவர்களது சிறந்த பண்பாகும். அதேவேளை ஆலயக்கட்டுமானப்பணிகளில் பங்கெடுத்து அதை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பல வழிகளிலும் பங்கெடுத்து உழைத்தவர்கள் என்றால் அதைப்பாராட்டாமல் இருக்கமுடியாது. கலைகளினூடாக ஆன்மீகப்பணி ஆற்றி மக்கள் மனதில் நற்கருத்துக்களைக் கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்தும் பெரும் பணியைச் செய்வதில் முதன்மையானவர்கள் என்று சொன்னால் மிகையாகாது.

விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். விளையாட்டினூடாக இளைஞர்களை ஒன்றுபடுத்தி ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒழுக்கம். கட்டுப்பாடு போன்ற சமூக விழுமியங்களை கொடுத்து இளைஞர்களின் சமூக ஈடுபாட்டை உயர்த்துபவர்கள் நீங்கள். இதனால் சமூகம் முன்னேறுவதைப் பார்க்கும் போது அதைப்பாராட்டாமல் இருக்கமுடியாது.

இந்தவகையில் சென் நீக்கிலஸ் சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைத்து 65 ஆண்டுகளை நிறைவு செய்யும் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தையும், அதன் நிர்வாகத்தையும் பாராட்டி ஆசீர் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**அருட்பணி பா.பி இராசசிங்கம்**
*பங்குத்தந்தை*

# தலைவரின் சிறப்புச் செய்தி



சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டின் தலைவராக இருப்பதையிட்டு இறைவனுக்கு நன்றி கூறி மகிழ்ச்சியடைகின்றேன். இவ் 65ஆவது விழாவில் வீறு நடைபோடும் எம் சனசமூக நிலையமும் எம் மக்களும் எமது பங்கில் சிறந்த கல்வியுடன் கூடிய விளையாட்டும் தொழில் வளமும் சிறக்க வாழ்த்துவதோடு குருத்துவமும் வளர வாழ்த்துகின்றேன்.

இந்த விழா சிறப்பாக நடைபெற எமது நிர்வாக உறுப்பினர்களுக்கும், எமது ஒவ்வொரு அமைப்புக்களுக்கும் நன்றி கூறுவதோடும் பண உதவி செய்த எம் ஒவ்வொரு மக்களுக்கும் சிறப்பாக வெளிநாட்டு வாழ் எம் உறவுகளுக்கும் நன்றி கூறுகின்றேன். மேலும் சகல வழிகளிலும் அறிவுரைகளும், ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், எம் பெரியோர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த நன்றிகள். மேலும் எமது சனசமூக நிலையம் தேவையான எல்லாக் கட்டுப்பாட்டு கொள்கை முறையின் படி செயல்படுகின்ற பெருமையைக் கொண்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றேன். இனிவரும் நிர்வாகத்தினரும் மென்மேலும் சிறப்புடன் செயல்பட்டு எமது நிலையத்தை ஒழுக்கம் நிறைந்த வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல எமது பாதுகாவலர் ஆசீர்வழங்குவாராக!

**அ. எமில் பிரபாகரன்**
*தலைவர்*
*சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையம்.*

# யாழ்/ நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலைய

# வரலாறு

ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தொன்பதாம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆறாம் நாள் நாவாந்துறை மண்ணின் பொன் நாளாகும். ஆம், அன்றைய தினத்தில்தான் எழுந்து நிற்கும் எமது பாதுகாவலர் பெயர் கொண்ட சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் அத்திவாரமிடப்பட்ட நன்னாளாகும்.

கடற்றொழில் துறையில் வல்லவர்களான எம் மூதாதையர்கள் எமது கிராமத்திற்கு ஒரு சனசமூக நிலையக் கட்டடம் தேவையென உணர்ந்து, நிலையத்தை நிர்மாணிப்பதில் முனைந்தனர். அன்றைய காலத்தில் அரசசார்புள்ள, சார்பற்ற அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உதவிகள் பல பெற்றனர். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவிகளையும் பெற்று நிலையத்திற்கு அடிக்கல்லை நாட்டினர். அக்காலத்தில் நிலையம் அமைக்க இருந்த இடத்திற்கு அருகில் கடல் அமைந்திருந்தது. அதனை நிரவி கட்டடத்தை அமைத்தது குறிப்பிடத்தக்கது. யாழ்.மாநகர சபையின் உதவியுடன் குப்பைகள் கழிவுகள் கடலில் போடப்பட்டு கடலை நிரவி போதியளவு காணியைப் பெற்று கட்டடத்தை நிர்மாணித்தனர். கட்டடம் நிர்மாணிப்பதை நிதி சிரமதானம் போதாதபோது ஊர்மக்களிடம் உழைப்பு எடுத்தும் சிரமதானம் மூலம் கடற்றொழிலுக்குச் சென்று நிதி திரட்டியும் சங்க கட்டடத்தை அமைத்ததமையும் குறிப்பிட்டாக வேண்டும். ஏனெனில் நிலைய கட்டடம் அமைக்கவேண்டுமென்ற ஊர் மக்களின் அவாவும், ஆவலும், ஒற்றுமையும் பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அக்காலத்தில் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த சனசமூக நிலையங்களில் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையக் கட்டடம் தான் பெரியது என்றால் மிகையாகாது.

சனசமூக நிலையக் கட்டடத்தை அமைப்பதுடன் எமது பெரியோர்கள் நின்று விடவில்லை. அக்காலத்தில் சென் நீக்கிலஸ் சனசமூகநிலையத்தைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் யாழ். மாவட்டத்திலேயே சிறந்த விளையாட்டு வீரர்களாக மிளிர்ந்தனர். 1943ல் உருவாக்கப்பட்ட யாழ். உதைப்பந்தாட்ட லீக்கில் எமது கழகம் இன்றுவரை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவ்வாறான இடப்பெயர்வு நாட்களிலும் வன்னி மண்ணில் முப்பத்தைந்து அணிகளுடன் விளையாடி முதலாவதாக வந்து வெற்றிக்கேடயத்தை பெற்றமையும் குறிப்பிட்டாக வேண்டும். ஆனால் விளையாட்டு மைதானம் என்று ஒன்று அக்காலத்தில் மைதானமாகப் பாவிக்கப்பட்டு வந்தது. அந்தச் சிறிய வளவில் விளையாடி சிறந்த அணியாகவும், சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் வந்தார்கள் என்றால் விளையாட்டின் ஆர்வத்தை என்ன என்பது. இதனை உணர்ந்த ஊர்ப் பெரியோர்கள் அக்கால கட்ட நிர்வாகத்தினர் சனசமூக நிலையத்திற்கு கட்டாயம் விளையாட்டு மைதானம் வேண்டுமென்பதை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்டனர்.

யாழ். மாநகரசபையினுடன் தொடர்புகொண்டு கழிவுகள். குப்பைகளைக் கொட்டி கடலை நிரவினர் அதற்குமேல் கல்லுண்டாய் ஊரி மண்ணைப் போட்டு செப்பனிட்டனர். அப்படி விளையாட்டு மைதானத்தை அமைத்ததும், விளையாடுவதற்கு ஏற்றதாக மைதானம் அமையவில்லை எனக்கண்டு, அக்காலத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு மைதானத்தை சீரானதாக அமைக்க முற்பட்டு அதில் வெற்றியும் கண்டனர்.

இவ்விளையாட்டு மைதானத்தில் எத்தனையோ உதைப்பந்தாட்டப் போட்டிகளும், இல்ல விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. எமது ஊர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகளும், விளையாட்டு மைதானம் இல்லாத கழகங்களும் தமது விளையாட்டு

நிகழ்வுகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. எமது மைதானம் அமைக்கப்பட்டு பல வருடங்களுக்குப் பின்னர்தான் கடலை நிரவி குடியேற்றத்திட்டம் அமைக்கும் முயற்சி தொடங்கப்பட்டதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இவ்வாறு எமது சனசமூக நிலையம் J/23 என்ற பதிவு இலக்கத்துடன் காலத்திற்குக் காலம் மாறிவந்த நிர்வாகத்தினரால் வழிநடத்தப்பட்டு வளர்ச்சிப்பாதையில் சென்றது. உறுப்பினர்களின் ஒற்றுமையையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் நிர்வாகங்கள் சிறப்பாக இயங்க வழியமைத்தன பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் போடப்பட்டமையும், சிறுவர்களுக்கான இரவுப்பாடசாலை படித்த இளைஞர் யுவதிகளால் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மேலும், சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம், சென் நீக்கிலஸ் இளைஞர் கழகம், சென் நீக்கிலஸ் மகளிர் மன்றம் என்பன சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை தாய்ச்சங்கமாகக் கொண்டு இயங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையம் அமைவதற்கும், சீராக நிர்வாகம் இயங்குவதற்கும், சங்கத்தின் வளர்ச்சிக்கும் காலத்திற்கு காலம் ஆத்மீகப் பணிபுரியவந்த பங்குத்தந்தையர்களினதும், அருட்சகோதரிகளினதும் பங்களிப்பு பாரியதாகும். எமது பங்கின் மறை பரப்பு பணிபுரிந்து வந்த பிறநாட்டு வெள்ளைக்கார அருட்தந்தையரும், அவர்களுக்குப் பின்வந்த எமது மாவட்ட அருட்தந்தையாரும், எமது நிலையத்தின் வளர்ச்சியில் பூரண அக்கறை கொண்டு செயற்பட்டனர். நிலையத்தின் வாசிப்புப் பகுதிக்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள், வழங்கி உதவியதுடன், விளையாட்டு நிகழ்வுகளுக்கு உபகரணங்கள், பரிசில்கள் வழங்கியும் ஆன்மீக கருமங்களை புரிந்து வந்தமையும் இங்கு நினைவு கொள்ளல்வேண்டும். தற்போது எமது பங்கில் மறைபரப்பு பணிபுரியும் பங்குத்தந்தையும் எமது நிலையத்தின் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்குவதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

எமது சங்கம் சிறப்பாக இயங்கிவரும் வேளையில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டது. எமது துர்ரதிஷ்டமாகும். சீராகவும், சிறந்த நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த நிலையத்திற்கு இப்படியான இழப்பு வரும் என எவருமே எதிர்பார்க்கவில்லை. 1982ல் இயற்கை அனர்த்தம் "மினி" சூறாவளியினால் எமது நிலையத்தின் கூரைச் சீற்றுக்களை கொண்டு சென்றது. எமது பாதுகாவலர் சென் நீக்கிலஸ் அவர்களின் ஆசீர் எமக்கு கிடைத்தது போலவே எண்ணினோம். அக்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரை அன்றைய நிர்வாகத்தினர் தொடர்பு கொண்டதன் பயனாக இரு நாட்களில் புதிதாக கூரை சீற்றுக்கள் உடனடியாகப் போடப்பட்டு புனர்நிர்மாணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மீண்டும் நிர்வாகம் சிறப்பாக இயங்கி வரும் வேளையில் நாட்டின் சீரற்ற நிலையின் காரணமாக இடம்பெயர்வு என்ற பெயரில் சொந்த இடத்தைவிட்டு அகன்றோம். திரும்பவும் எமது சொந்த ஊருக்கு வருவோம் என எதிர்பார்க்காத வேளையில் மீண்டும் எமது இருப்பிடம் வந்தோம். சீரற்று இருந்த நாட்டின் நிலைமையிலும் சென்நீக்கிலஸ் ஆலய வளவே விளையாட்டு மைதானமாகப் பாவிக்கப்பட்டு வந்தது. எமது கிராம இளைஞர்கள் தமது விடாமுயற்சியாலும் ஒற்றுமையாலும் எமது நிலையத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று சீராக இயக்கி வருகின்றனர். 2000ம் ஆண்டில் எமது நிலையத்திற்கு அருகாமையில் இருந்த சிறுவர் பூங்கா புனரமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், எமது நிலைய வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட நம்மூர் அன்பர்கள் கலை அரங்கம் விளையாட்டு பார்வையாளர் அரங்கம் (பவிலியன்) எமது நிலையத்திற்கு அமைத்துக் கொடுத்துள்ளனர். இவை மிகப் பாராட்டத்தக்கதாகும். இவ்வாறு வசதி உள்ளவர்கள், வெளிநாட்டு அன்பர்கள் எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவ முன்வரவேண்டும். எமது நிலையத்தின் 65ம் ஆண்டு நிறைவை சிறப்பாக நடத்தி முடிக்கவும், மேலும் தொடர்ந்து எமது நிலையம் சிறப்பாக இயங்க எமது பாதுகாவலர் சென்.நீக்கிலஸ் முனிந்திரனின் ஆசி கிடைக்க வேண்டி நிற்போம்.

* * * * * * *

# ஆசிச் செய்தி

கடல் வளமும், கலை வளமும் செழித்தோங்கும் நாவாய் ஊரில், சென் நீக்கிலஸ் மக்கள் வாழுகின்ற பகுதியின் நடு மையமாக அழகுறக் காட்சி தரும் சனசமூக நிலையம் தனது 66வது, அகவையில் கால் பதிக்கும் இந்நாளில் உங்களோடு இணைந்து நானும் பெரும் மகிழ்ச்சி அடைவதோடு, உங்களை வாழ்த்தி நிற்கின்றேன்.

உங்கள் மூதாதையர் கட்டிக்காத்த இந்த நிலையம் பிரமாண்டமான விளையாட்டுத்திடல், சிறுவர் பூங்கா, நூல் நிலையம், அதன் அருகே சிற்றாலயம் போன்றவற்றால் மெருகூட்டப்பட்டு அழகுறக் காட்சி தருகின்றது.

தற்கால சூழலுக்கு ஏற்ப மிகவும் அழகாகவும், வசதியாகவும் புனரமைக்கப்பட்டு, சிறுவர் முதல் முதியோர் வரை எல்லோருக்கும் பயன் அளிப்பதுடன் அனைவரின் உடற் களைப்பையும், சோர்வையும், மறந்து நடமாடுகின்ற, உற்சாகத்தை அளித்து மகிழ்விக்கின்ற இடமாக இந்நிலையம் காட்சி அளிக்கின்றது.

அத்துடன் சென். நீக்கிலஸ் மக்களாகிய நீங்கள் உங்களுடைய இந்த நிலையத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்திருக்கிறீர்கள். பல துறைகளில் சிறியோர் முதல் பெரியோர் வரை வளர்ச்சி கண்டுள்ளீர்கள். சிறப்பாக இளையோர் விளையாட்டுத் துறையில் மிகுந்த ஆர்வம் காட்டி, கிராமத்திற்கும், நிலையத்திற்கும் பெருமை சேர்த்துள்ளீர்கள். அத்துடன் சிறுவர் கழகம், மகளீர் மன்றம், கடற்றொழிலாளர் சங்கம், முதியோர் சங்கம், கலைக்குழு, இரவுப் பாடசாலை போன்ற பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே உங்கள் அனைவரையும் பாராட்டுவதும், உற்சாகப்படுத்துவதும் எமது கடமையும் பொறுப்புமாகும்.

இளையோர் சிறார்களின் கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் காட்டுகிற அக்கறை மிகவும் போற்றப்பட வேண்டியதொன்றாகும். வீடுகளில் கல்வி கற்க முடியாத பிள்ளைகளை இரவில் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை பாடம் கற்பிப்பதும், சுய கற்றலுக்கு வழி காட்டுதலும் பாராட்டப்பட வேண்டியவையாகும். இன்றும் உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த சேவையும் கட்டுக்கோப்பான தலைமைத்துவ வழி நடத்துதலும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. எனவே உங்களுடைய சனசமூக நிலையம் ஸ்தாபித்து 65வது அகவையில் பல மாற்றங்களுடன் அழகுறக் காட்சி அளிக்கின்றது. இன்னும் பல துறைகளில் நீங்கள் வளர்ந்து இந்நிலையத்திற்குப் பெருமை சேர்த்திட வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி மேரி ஜெசி நீக்கிலாப்பிள்ளை**
*நல்லாயன் கன்னியர் மடத்தலைவி,*
*நாவாந்துறை.*

# ஆசிச்செய்தி



நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, அதன் 65 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் இவ்வேளையில், இந்நினைவு நாளை சிறப்பிக்கும் முகமாக வெளியிடப்படும் நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு, 65 ஆண்டுகள் நிறைவடைகின்ற இவ்வேளையில், இந்நிலையம் பல்வேறுபட்ட சமூக சேவைகளை முன்னெடுத்து அவற்றில் வெற்றி கண்டதோடு, மக்கள் அனைவரையும் பல நிகழ்வுகள் வழியாக ஒன்றுபடுத்த எடுத்து வருகின்ற ஒவ்வொரு முயற்சிகளும் பாராட்டத்தக்கவை. குறிப்பாக, கலை நிகழ்வுகள், விளையாட்டுக்கள், சிரமதான நிகழ்வுகள், ஆலய திருவிழாக்கள் என பலவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் சிறப்பாக, சென்.நீக்கிலஸ் சனசமூக அமைப்பின் கீழ் இயங்கி வருகின்ற கழகங்கள், சங்கங்கள், குழுக்கள், கல்வி வளர்ச்சிக்கான அமைப்புக்கள் அனைத்தும் சமுதாய வளர்ச்சியில் பெரிதும் உதவி புரிகின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

புனித நீக்கிலாருடைய திருநாமம் கொண்ட இச்சனசமூக நிலையம் புனிதரின் முன்மாதிரிகையைக் கொண்டு செயற்பட்டு வருவதைக் காணமுடிகிறது. “ஒற்றுமையே பலம்” என்ற வாக்கிற்கிணங்க அனைத்து நிகழ்வுகளிலும் ஒன்றுபட்டு உழைக்கும் மனநிலையையும், இன்ப துன்பங்களில் பங்கெடுக்கும் மனப்பக்குவத்தையும் இச்சனசமூக நிலைய அங்கத்தவர்கள் கொண்டிருப்பது எமது ஊருக்கு பெருமையைப் பெற்றுத் தருகின்றது. இறைவிசுவாசத்தை தம் வாழ்வின் சொத்தாகப் போற்றி வாழ்கின்ற எம் மண்ணின் மக்கள் புனித நீக்கிலாரின் பெயர் கொண்ட இந்நிலையத்தின் ஊடாக இன்னும் பல நன்மைகளைப் பெறுவார்கள் என்பது எனது நம்பிக்கை.

ஆகவே நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் இன்னும் பல வளர்ச்சிப் படிகளில் பயணிக்க வேண்டும். பற்பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என வாழ்த்தவதோடு, இந்நிலையத்தின் தலைவர், செயலாளர், அங்கத்தவர்கள் அனைவரையும் இந்நன்நாளில் பெருமிதத்தோடு வாழ்த்துகிறேன்.

**அருட்பணி. ச.பாலேந்திரன்**

# யாழ்.சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவில் ஆசிச்செய்தி



"நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!"

கடலின் மெல்லிய தென்றல் அலையில்த் தவழ்ந்து வந்து உடல் வருடி உற்சாகமூட்டும் அழகிய நாவாய்ப் பகுதியில் புனித நீக்கிலாரின் அருளாட்சி நிலவும் பதியில் குன்றாச் சிறப்புடன் விளங்கும் எம் சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் தனது 65 ஆவது அகவை நிறைவில் மகிழும் இன்நாளில் நாடும் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன். விளையாட்டு, கல்வி, கலை, சமூக சேவையென பல்துறைகளில் சாதனை படைத்த இவ் நிலையம் மென்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகின்றோம். அதேயிடத்து "In nature there are neither rewards or Punishments there are conseguences" அதாவது "இயற்கையில் வெகுமதிகளோ தண்டனைகளோ கிடையாது. பின் விளைவுகள் மாத்திரம் தான்" எனும் Reberd Green Ingersell எனும் அறிஞரின் கூற்றுக்கு அமைய அழகிய இயற்கையின் ஊடாக உன்னத இறைவனின் மகிமையைக் காணவும், அவரைத் தேடவும், அவருக்காக வாழவும் கூட்டாக முயலுவோம். அதேயிடத்து "Preserve the old but know the new" அதாவது பழமையைப் பாதுகாத்திரு புதுமையை அறிந்திடு" எனும் முதுமொழியையும் நினைவூட்ட விரும்புகின்றேன். ஏனெனில் புதுமை எனும் போர்வையில் சமூகத்தினை சிதைக்கும் மாயைகளில் மயங்காது, எமது கலை கலாசார சிதைக்கும் மாயைகளில் மயங்காது. எமது கலை கலாசார பாரம்பரியங்களையும், விசுவாச வாழ்வினையும் தொடர்ந்து வரும் எம் தலைமுறைகளுக்கு கையளிக்கும் உயரிய செயற்பாடுகளையும், தொடர்ந்தும் முன்னெடுக்கவும் சமூக வளர்ச்சியில் காத்திரமான வகிபங்கை நிறைவேற்றவும் இறைவன் துணை செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து, எமது பாதுகாவலர் ஆயராம் புனித சன் நீக்கிலாவு மாமுனிவரின் அருட்காவலையும், பாதுகாப்பையும் வேண்டி மனதார ஆசித்து வாழ்த்தி நிற்பதோடு இவ் நிர்வாகத்தினருக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

**அருட்சகோதரி விக்றறின் செல்வதி மலக்கியாஸ்**
*திருக்குடும்ப கன்னியர் சபை,*
*உரோம்.*

# யாழ்.சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 65வது ஆண்டு நிறைவில் ஆசிகள்



"நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!"

கடலில்த் தவழும் தென்றல் நாதன் நாமம் பாடும், நீண்ட கால கத்தோலிக்க பாரம்பரிய வரலாற்றினை தன்னகத்தே கொண்ட, புனித சன் நீக்கிலாவு மாமுனிந்திரர் வீற்றிருக்கும் நாவாய்த்துறைப் பதியில் மக்களுக்கு நற்சேவையாற்றி வரும் எமது சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் தனது 65ஆவது அகவை நிறைவில் மகிழும் இன்நாளில் நாமும் இறையாசி கூறி வாழ்த்தி நிற்கின்றோம். மேலும் "Every noble cativity make room for itself" அதாவது "ஒவ்வொரு விழுமியச் செயலும் பழுதின்றி நிற்கும்" என்பார்கள். நீண்டகால பழுதற்ற பாரம்பரியங்களுக்கு சொந்தக்காரர்களான நாம் எமக்கு உரியவற்றை பாதுகாக்கவும், பேணவும், அடுத்த தலைமுறைக்கு கையளிக்கவும் கடமைப்பட்டவர்களாக உள்ளோம். அந்தவகையில் இன்நிலையம் தன் கிளை அமைப்புக்களின் ஊடாக இன்றுபோல் என்றும் நற்சேவை புரியவேண்டுமென்று வாழ்த்துகின்றோம். மேலும் "Constan change is a sign of Progress" "இடையறா மாற்றம் முன்னேற்றத்தின் அறிகுறி" என்பார்கள். எனவே மாறும் உலகில் நல்ல மாற்றங்களைத் தெரிவு செய்து ஒற்றுமையுடன் முன்னேறுவோம் எனவே "Begin today, end never" "நல்லவற்றை இன்றே தொடங்குவோம்" என்று முடிக்காமல் தொடருவோம் எனவே இந்நிலையத்தையும், மக்களையும் இதுவரை வழிநடத்திய இறைவன் தொடர்ந்தும் வழிநடத்த புனித நீக்கிலாரினதும், அன்னை மரியாளினதும் பரிந்துரைகள் வழியாக இறை தந்தையை வேண்டி இவ்வினிய நிறைவின் நாளிலே, இனிய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்றி மகிழ்ச்சியடைகின்றேன். இவ் வாய்ப்பிற்கும் நன்றி கூறுகின்றேன்.

**அருட்சகோதரி மேசிடஸ் செல்வநாயகம்**
*திருக்குடும்ப கன்னியர் மடம்*
*முழங்காவில்*

# மனமார வாழ்த்துகின்றேன்



நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் தனது 65 வது ஆண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு மனதார பாராட்டுகின்றேன். பதிவு செய்யப்பட்ட கிராம மட்ட அமைப்புக்களினால்த்தான் தனது எல்லைப்பகுதிக்குள் வாழும் மக்களின் மேல் அக்கறையிருக்கும் என்ற அடிப்படைக் கோட்பாட்டிற்கமைவாக சிறந்த சேவைகளை செய்யும் சனசமூக நிலையங்களில் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையமும் ஒன்று.

கலை, கலாச்சாரவிழுமியங்கள், விளையாட்டு, கல்வி மற்றும் அடிப்படைதேவைகளை தங்கள் மக்கள் அனைவருக்கும் பெற்றுக்கொடுத்தல் என்ற பார்வை, தொலை நோக்குடன் செயற்படும் சனசமூக நிலையம் ஆண்டு விழாவை கொண்டாடுவது மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

**ச.லோகசிவம்**
*சனசமூகநிலைய உத்தியோகத்தர்,*
*பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்,*
*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.*

# புனித நீக்கிலார் ச.ச.நிலைய நிர்வாக உறுப்பினர்களின் வாழ்த்து

புனித நீக்கிலார் ச.ச.நிலையம் தனது 65வது ஆண்டினை சிறப்பாக கொண்டாடுகின்ற இன்நாளில் நாங்கள் நிர்வாக உறுப்பினர்களாக இருக்கின்றமையையிட்டு மகிழ்வடைகின்றோம். மேலும் எம் பெரியோராலும் மக்களாலும் உருவாக்கப்பட்டு புதுப்பொலிவூட்டுகின்ற எமது ச.ச.நிலையமானது புனித நீக்கிலாரின் பரிந்துரையிலும் ஆசீர்வாதத்திலும் நிறைந்த சமூகமாக திகழ வாழ்த்துவதோடு, எம் எல்லா மக்களும் எம் பங்கில் சமூக சேவைகள் கொண்டு செயற்பட்டு எமது ச.ச.நிலையத்தை இன்னும் சிறப்பான பாதையில் வழி நடாத்த ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்பதனையும் தெரிவிக்கின்றோம்.

65வது ஆண்டினை சிறப்பாக கொண்டாடும் இன்நாளில் எம் நிர்வாகத்தினருடன் சேர்ந்து விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய எம் பங்குத்தந்தை பா.பி.இராஜசிங்கம் அருட்சகோதரி ஜெசி அவர்களோடு எம் பெரியோர்கள் இளைஞர், யுவதிகள் சிறுவர்களென பல வழிகளிலும் பணம் பொருள்கள் வழங்கி ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கு இனிய சிறப்பான ஆண்டு விழா வாழ்த்தினை கூறி நிற்கின்றோம். இதைப்போல் இன்னும் பல ஆண்டுகள் எம் மக்களோடு சேர்ந்து எமது நிலையத்தின் ஆண்டு விழாக்களை கொண்டாடுவோம் என வாழ்த்துகின்றோம்.

**புனித நீக்கிலார் ச.ச. நிலைய உறுப்பினர்கள்**
*நாவாந்துறை*
*06.11.2014*

# 2014ம் ஆண்டு நிர்வாக சபையினர்



பின் வரிசை : பெ.இ.அகிலநாயகம் (கணக்காய்வாளர்), பி.யேசுறாஜன், அ.கனிஸ்ரன் (விளை.தலைவர்), வ.றதீஸ். ஞா.றொக்சன், அ.அன்ரனிபேளின், அ. அமீலன்

முன்வரிசை : ஏ.உதயகுமார், செ.வில்பிறட் அப்பர், இ.வில்சன் (செயலாளர்), அருட்பணி ப.வி.இராஜசிங்கம் (பங்குத்தந்தை), அ.எமில்பிரபாகரன்(தலைவர்), வ. அன்ரன், அ.அஜித்குமார் (பொருளாளர்).

# 65[வது] வருடம் காணும்

# யாழ்/ நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை பாராட்டுகின்றோம்

06.11.2014ல் அகவை 65ல் காலடி பதிக்கும் எமது சென்நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை புனித மரியாயின் சேனையினராகிய நாம் பாராட்டுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம்.


இச்சங்கம் எமது முன்னோர்களால் 06.11.1949 அன்று ஸ்தாபிக்கப்பட்டதாகும். மூதாதையினரின் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் விடாமுயற்சியும் தான் சென். நீக்கிலஸ் சனசமூன நிலையம் அறுபத்தைந்தாவது ஆண்டை நிறைவாக்கி விழா எடுக்கின்றது என்றால் மிகையாகாது. முன்னோர்களைத் தொடர்ந்து வழிவந்தவர்களால் திறம்பட வழிநடத்தப்பட்டது. இன்றும் வழிநடத்தப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டிலும், மதம் சம்பந்தமான நிகழ்வுகளிலும், கலை கலாச்சார நிகழ்வுகளிலும், சிறுவர் சிறுமியர் கல்வியிலும், பிற நிகழ்ச்சிகளிலும் இந்நிலையம் சிறப்பாக செயல்ப்பட்டு வருகின்றது இவை பாராட்டுக்குரியதாகும்.

யாழ்/ நாவாந்துறை சென். நீக்கிலஸ் பங்கின் புனித மரியாயின் சேனையினராகிய எமக்கு பல உதவிகளையும் ஒத்தாசைகளையும் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையம் வழங்கி வருகின்றமை வரவேற்கத்தக்கது. மேலும் இச்சங்கத்தின் ஆதரவு எமக்கு கிடைக்க வேண்டுமென கேட்கின்றோம். எமது சபையையும் 65ம் வருட வாழ்வில கலந்துகொள்ள அழைப்பு அனுப்பியதை இட்டு மகிழ்ச்சி அடைவதுடன் நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**சென். நீக்கிலஸ் மகா பரிசுத்த மாதா**
*புனித மரியாளின் சேனை அங்கத்தவர்கள்.*
*நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயம்.*

# சமூக மேம்பாட்டில் ஓர் மைல் கல்



அறுபத்தைந்து அகவைகள் சமூக அபிவிருத்தியின் பல் பரிமாணங்களில் வீறு நடைபோட்டு விழாக்காணும் நாவாய் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

நாவாந்துறை தெற்கு பிரதேசத்தின் சமூகப்பணி மையமாக விளங்கும் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையம் சூழவுள்ள மக்களுக்கு சிறப்பான தலைமைத்துவத்தையும் வழங்கி வருகின்றது. அபிவிருத்திப்பணிகளை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதிலும், சமூக விழுமியங்களையும் கட்டுக்கோப்புக்களையும் பேணுவதில் அதன் பங்களிப்பு அபரீதமானது.

இதன் அங்கமாக விளங்கிடும் சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் வடபுலத்திலே பிரபல்யம் மிக்க கழகங்களில் ஒன்றாகத் திகழ்வதுடன், பல்வேறு சாதனைகளையும் படைத்துள்ளது. விளையாட்டுத் திறன்களுக்கு விளையாட்டுக்கழகம் மூலம் களமமைத்துள்ள சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையம் இளையோரின் ஆற்றல்களை, ஆளுமையை வளர்க்க இளைஞர் கழகம் மூலம் பல்வேறு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பது போற்றுதற்குரியது. மேலும் சிறுவர் கழகம், மகளிர் மன்றம், மூத்தோர் அவை, கடற்றொழிலாளர் அமைப்பு என பல்வேறு துணை அலகுகள் மூலம் பல்வேறு பணிகளை சமூக அபிவிருத்தியை இலக்காக வைத்து முன்னெடுத்து வருவது பாராட்டத்தக்கது.

இப்பிரதேச மாணவர்களின் வளர்ச்சிக்காக இரவுப்பாடசாலை மற்றும் கணனி வள நிலையம் ஆகியவற்றையும் நடத்தி வருவது தூர தரிசனம் மிக்க செயற்பாடாகும். எமது பாடசாலையின் அபிவிருத்தியிலும் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையம் சிறப்பான பங்களிப்பை நல்குவதை இத்தருணத்தில் நன்றியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

நாவாய் தெற்குப் பிரதேச மக்களின் வாழ்வியலுடன் ஒருங்கே அறுபத்தைந்து அகவைகளாகப் பயணிக்கும் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் பணிகள் வரலாற்றுப் பதிவாகும். இத்தகைய வரலாற்றைப் படைத்திருக்கும் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் பணிகள் எதிர்காலத்தில் மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன். அதன் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பயனாளிகள் யாவர் வாழ்வும் சிறக்க ஆசிக்கின்றேன். புதுயுகம் நோக்கி எழுச்சியுடன் பயணிக்கும் சென்நீக்கிலஸ் சனசமூக நிலைய அறப்பணிகளுக்கு எம் கல்விச்சாலையும் என்றும் உறுதுணையளிக்கும்.

"பயணங்கள் தொடரட்டும், பணிகள் சிறக்கட்டும், கடின உழைப்பே வெற்றி"

**F.X.அன்ரன்**
*S.L.P.S,B.A.(Hons), M.A.(Merit),M.Phil, PGDE, NC-Engl*
*அதிபர்,*
*யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.*

# 65ம் வருட அகவை காணும் யாழ்/ நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றேன்



06.11.1949ம் ஆண்டில் எம்முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சென்நீக்கிலஸ் சனசமூக நிலையம் 06.11.2014ம் ஆண்டு அகவை அறுபத்தைந்தைக் காண்பதில் நான் பெரும் மகிழ்சசி கொள்ளுகின்றேன். எமது மூதாதையர் ஒற்றுமையுடனும், சுயமுயற்சியுடனும் தமது ஊதியத்தையும் செலவழித்து, தோற்றுவிக்கப்பட்டதுதான் இச்சங்கம் கடற்தொழிலையே நம்பியிருந்த எம் மக்கள் தமது சிறிய வருமானத்தின் மூலமும் அரசநிறுவனங்களின் மூலமும் இப்பாரிய நிலையத்தை கட்டுவித்தனர். அக்காலத்தில் எமது மதத்திற்கே முன்னுரிமை கொடுத்து செயற்பட்டனர். யாழ்ப்பாணத்திலேயே பெரிய நிலையமாக விளங்கி சிறப்பிடம் பெற்றது. அக்காலத்திலே உதைப்பந்தாட்ட விளையாட்டில் யாழ்ப்பாணத்திலேயே சிறந்து விளங்கினார்கள் என்றால் மிகையாகாது.

நம் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இந்நிலையம் தொடர்ந்து வந்த நிர்வாகங்களினால் செயற்பாடுகளிலும் வளர்ச்சி பெற்றது. விளையாட்டிலும், கலை கலாச்சாரங்களிலும், மத நிகழ்வுகள் போன்ற சகல துறைகளிலும், வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றனர். தற்போதைய நிர்வாகத்தினரும் இந்நிலையத்தை திறம்பட இயக்கி வருகின்றமை பாராட்டுதற்குரியது. எமது நிலையத்தின் 65வது ஆண்டு விழா சீராகவும் சிறப்பாகவும் நடைபெற புனித நீக்கிலாரை வேண்டுகின்றேன் எனது ஆசியை நல்குகிறேன்.

**பெஞ்சமின் ஜேக்கப்**
*கடற்கரை வீதி,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

# வாழ்த்துச் செய்தி

கத்தோலிக்க பாரம்பரியத்தில் புனித நீக்கிலாரின் நாமம் கொண்டு யாழ் நகரில் நாவாய் மண்ணில் பெருமையுடன் செயல்பட்டு வரும் "சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின்" 65வது ஆண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேற்படி நிலையமானது எமது கிராமத்தில் முன்னெடுத்துச் செல்லும் கல்வி, கலை, கலாச்சாரம், ஆன்மீகம், விளையாட்டு, முதியோர் கௌரவிப்பு போன்ற துறைகளில் 65 ஆண்டுகளாக பேரோடும் புகழோடும், அனைவரின் பாராட்டுக்களோடும் சிறப்புற்று விளங்கி வரும் இவ்வேளையில், தங்கள் சேவை மென்மேலும் சிறப்புற்று சமூக, சமுதாய, ஆன்மீகப் பணிகளில் நூற்றாண்டு விழாக்கான ஒவ்வொரு நிர்வாகிகளையும் அங்கத்தவர்களையும் மனமார இறை ஆசியோடு வாழ்த்தி நிற்கின்றேன்.

**தோமஸ் அருள்ராசா**
*முதியோர் சங்கத் தலைவர்*
**J/84,** *கிராம சேவையாளர் பிரிவு,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

# 65வது அகவையைக் காணும் யாழ். நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றோம்

06.11.1949ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட எமது நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் 06.11.2014ம் ஆண்டு இன்று அறுபத்தைந்தாவது வருட நினைவை கொண்டாடி மகிழ்கின்றது. நாம் அறியாக் காலம் தொட்டு இந்நிலையம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. எமது மூதாதையரின் ஊக்கத்தாலும் ஒத்துழைப்பினாலும், ஒற்றுமையினாலும், கடின உழைப்பின் மூலமும் இச்சங்கத்தை நிறுவினர் என சில பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். இவ்வாறாக அமைக்கப்பட்ட இந்நிலையம் யாழ்ப்பாணத்தில் சிறப்புடன் செயற்பட்டதாகவும் நாம் அறிகின்றோம். விளையாட்டுத் துறையிலும், கலை கலாச்சார நிகழ்விலும், மத சம்பந்தமான நிகழ்ச்சிகளிலும் பிள்ளைகளின் படிப்பித்தலிலும் கூடிய அக்கறை கொண்டு நிர்வாகங்கள் செயற்பட்டு வருவது பெருமைக்குரியது. தற்போதைய 2014ம் ஆண்டு நிர்வாகத்தினரின் கீழ் 65ம் வருட அகவை நிகழ்வுகள் நடைபெறுகின்றவை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகள் சீராகவும், ஒற்றுமையுடனும் சிறப்பாக நடைபெற இறைவனை வேண்டி நிற்கின்றோம். எமது மாதர் சங்கத்தை ஊக்குவித்து, வழிநடத்தவேண்டும் எனக்கேட்டு நிற்கின்றோம். நன்றி!

**சென் நீக்கிலஸ் மாதர் சங்கம்**
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

# யாழ். நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 65வது வருட அகவையை மகளிர் வாழ்த்துகின்றோம்

எமது சென்நீக்கிலஸ் சனசமூக நிலையம் நாங்கள் பிறக்காத காலத்திலே 06ந் திகதி, கார்த்திகை மாதம் 1949ம் ஆண்டு எங்கள் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டதாக, பெரியவர்கள், கூறி நாம் அறிகின்றோம். அத்தகைய தொன்மை வாய்ந்த இந்நிலையம் 06ந் திகதி கார்த்திகை மாதம் 2014ம் ஆண்டு 65ம் வருட அகவையைக் கொண்டாடுகின்றது. இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 65 வருடங்களில் அப்படியானதொரு கட்டுக்கோப்புடனும் ஒற்றுமையுடனும் செயல்பட்டுள்ளது என்பதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. பல நிர்வாகங்கள் மாறி மாறி வந்தாலும் வளர்ச்சிப் பாதையில் சென்றதே தவிர வளர்ச்சி குன்றவில்லை என்றே தோன்றுகின்றது.

சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை தாய்ச் சங்கமாகக் கொண்டு எமது சென் நீக்கிலஸ் மகளிர் மன்றம் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நாம் எமது மகளிர் மன்றத்தால் செயல்படுத்தப்படும் நிகழ்வுகளுக்கு எமது நிலையம் நிர்வாகம் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்துதவுகிறது. எமது மகளிர் சங்கத்தால் விளையாட்டு நிகழ்வுகள் கலை நிகழ்வுகள், மத நிகழ்வுகள் யாவற்றிலும் எமக்கு தோள் கொடுத்து உதவுவது பெருமைக்குரியது.

மேலும் மேலும் எமக்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். இந்த வருட சனசமூக நிலையத்தின் நிர்வாகத்தின் கீழ் 65ம் வருட அகவை நிகழ்வுகள் நடைபெறுவது பெருமைக்குரியது விட்டுக் கொடுப்பும் ஒற்றுமையும் கொண்ட நிர்வாகத்தினராகிய இவர்கள் 65ம் வருட நிகழ்ச்சிகளை மிக சீராக சிறப்புடனும் நடத்தி முடிக்கவேண்டும் என புனித நீக்கிலாரை வேண்டுகின்றோம்.

**யாழ்/ சென் நீக்கலஸ் மகளிர் மன்றம்.**
*கடற்கரை வீதி.*
*நாவாந்துறை.*

# அகவை 65இல் காலடி பதிக்கும் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் வாழ்த்துகின்றோம்

கடல் வளம் செழிக்கும் எம் நாவாயூர் நகர்தனில்
திடம் பெற்ற நம் மூதாதையரால் மலர்ந்ததுவே
தடம் 65இல் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் அதே
குடதிசை ஊரின் பெருமையை பறைசாற்றி நிற்பது இதுவே

வளம் பெற்ற கடல் தொழிலாளர் கொண்ட நம் ஊரில்
களம் பல கண்ட நம் முன்னோர் சிறப்புடன் செய்த
தளங்கள் பல பதித்து சேவையாற்றி வரும் நிலையம் தன்னில்
வளமாக நம்மக்கள் வாழசிறப்புடன் மிளிரும் நிலையம் இதுவே

கிளைகள் பல பரப்பி நிற்கும் ஆலம் விருட்சம் போல் எம் நிலையம்
விளையாட்டின் மேன்மையை பறைசாற்றி நிற்கின்றது
தெளிவான சிந்தனையுள்ள பல தலைவர்களை அரங்கேற்றியது
வளமுடன் செழிக்க பாதுகாவலர் சென் நீக்கிலார் துணை உண்டு

பற்றுடன் பாங்காக நம்நிலையம் வளர அனைவரும் உழைத்து
வெற்றிகள் பல பெற்று தலை நிமிர்ந்து நிற்க சேவைகள் புரிவோம்
அறநெறியுடன் நம் சிறார்கள் வளர அரும்பணியாற்றுவோம்
திறனுடன் வளர்ந்து நூறுவருடங்கள் காண வாழ்த்துகின்றோம்.

**சென் நீக்கிலஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
*நாவாந்துறை.*

# சென்.நீக்கிலஸ் இளைஞர் மன்றத்தின் வாழ்த்துச்செய்தி

நாவாயூர் மண்ணில் புகழ்பூத்த எமது சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 65ம் ஆண்டு நிறைவு பூர்த்தியானது இளைஞர் எமக்கு பெருமைக்குரிய விடயமாகும். எதிர்கால சந்ததியினராகிய எமக்கு முன்னோடியாக திகழும் ஓர் பாடசாலையாக அமைகின்றது எனலாம். எம்மண்ணின் சகலவிதமான செயற்பாடுகளுக்கும் முன்னின்று செயற்படுவதாக சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் திகழ்கின்றது. கிராமத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவி, கல்வி, தொழில், விளையாடுவதற்கான மைதானத்தை அழைத்து கிராமத்தின் அனைத்து வித செயற்பாட்டிற்கும் முன் நின்று செயற்படுவதற்காக சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் திகழ்கின்றது. அந்தவகையில் இளைஞர்களாகிய நாம் ஓர் கழகத்தினை எமக்கென்று உருவாக்கி இளைஞர் கழகம் எனும் பெயரிட்டு அக்கழகத்தின் மூலம் கல்வி, விளையாட்டு, கிராமிய நற்செயற்பாடுகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பை வழங்குகின்ற நிலையமாக சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் விளங்குகின்றது. இளைஞர்களாகிய நாம் விளையாட்டிலும் ஏனைய சமய, நடவடிக்கைகளில் ஈடுபட சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் ஊக்குவிப்பதுடன் ஒத்துழைப்பையும் வழங்குகின்றமை இன்றியமையாததாகும்.

எமது சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் செயற்பாட்டில் இளைஞராகிய நாமும் பங்கெடுப்பதற்கும், ஓர் அங்கத்துவத்தினை கொடுத்துள்ளதுடன் எமது செயற்பாடுகளை ஏற்று திருத்த வேண்டியவைகளை திருத்தியும் எமக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. மக்களை ஒன்றிணைந்து சமூக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற எமது சனசமூக நிலையத்தில் இளைஞர்களின் பங்களிப்பு இடம் பெற்றுள்ளதையிட்டியும், எம் இளைஞரை தமது கழக செயற்பாடுகளில் ஒன்றிணைக்கின்ற எமது சென் நீக்கிலஸ் சனசமூக நிலையமானது தனது 66வது ஆண்டில் காலடியினை சிறப்பாக எடுத்து வைக்க வாழ்த்துவதுடன் தனது செயற்பாடுகளை இன்னும் திறம்பட ஆற்றுவதுடன் இளைஞர்களாகிய எமக்கு முன்னுதாரணமாக திகழ்ந்துவரும் இவ் சனசமூக நிலையத்தில் இளைஞர் நாமும் பங்கெடுத்து அதன் வளர்ச்சியை மேலும் எடுத்துச் செல்கின்றவர்களாக திகழ்வோம் என கூறி 65 வது ஆண்டு நிறைவு மாற்றியை கொண்டாடும் எம் சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை வாழ்த்துவதுடன் மென்மேலும் எம் சனசமூக நிலையம் வளர்ச்சியடையவும், அதன் செயற்பாடுகள் திறம்பட அமையவும் எமது பங்களிப்பினை நல்குவோம் என்றும் எமது சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் எம் பங்களிப்பினை நல்குவதுடன் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேலும் திறம்பட அமைய வாழ்த்துகிறோம்.

**சென். நீக்கிலஸ் இளைஞர் மன்றம்**
*நாவாந்துறை.*





சென். நீக்கிலஸ் இளைஞர் மன்றம்



உதைபந்தாட்டப்போட்டி ஒன்றில் வெற்றிபெற்றபோது..

# அகவை 65ம் வருட விழாவைக் கொண்டாடும் யாழ்/ நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றேன்

"இன்னார் செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்" - குறள்



எமக்கு இன்னல்கள், இடைஞ்சல்கள் செய்பவர்களை அவர்கள் நாணும் (வெட்கப்படும்) படி பொறுமையைக் கடைப்பிடித்தால் எல்லாம் வெற்றி பெறும் பலமும், ஒற்றுமையும் ஓங்கும்.

06ந் திகதி கார்த்திகை மாதம் 1949ம் ஆண்டு எமது நாவாந்துறை மண்ணில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்நாளாகும். ஆம், அன்றுதான் இன்று அறுபத்தைந்தாவது ஆண்டினை எட்டி நிற்கும் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் எமது மூதாதையர்களால் தோற்றுவிக்கப்பட்டது. அன்று எமது முன்னோர் செய்த அரும்பணி இன்று அகவை 65ல் கண்டு விழா எடுக்கப்படுகின்றது.


யாழ் நகரின் குடதிசையில் அமைந்துள்ள எமது நாவாயூர் கிராமம் கடல்வளம் செழித்து கடல் தொழிலில் சிறந்து விளங்கியது. தற்போதும் அந்த நிலையே உண்டு. எமது மூதாதையர் தமது உடல் உழைப்பின் மூலமும், தமது வருமானத்தின் மூலமும், அரச அதிகாரிகள் அனுசரணையுடனும் இந்நிலையத்தைக் கட்டி முடித்தனர். அன்றைய பெரியோர் ஒற்றுமையுடனும், விடாமுயற்சியுடனும், தமது நிர்வாகத் திறமையாலும் இச்சங்கத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டு சென்றனர். அவர்கள் விட்டுக் கொடுப்புடனும் எதையும் தாங்கும் பக்குவத்துடனும் நிலையத்தை வழி நடத்தியபடியால்தான் இன்று அறுபத்தைந்தாவது ஆண்டுவிழா கொண்டாடப்படுகிறது.

காலம் காலமாக மாறிமாறி வந்த நிர்வாகங்கள் திறம்படச் செயல்பட்டு நிலையத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றனர். சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம், சென் நீக்கிலஸ் இளைஞர் கழகம், சென் நீக்கிலஸ் சிறுவர் கழகம் சென் நீக்கிலஸ் மகளிர் மன்றம், மாதர் சங்கம், சென் நீக்கிலஸ் முதியோர் கழகம், சென் நீக்கிலஸ் கலைக்குழு போன்ற அமைப்புக்களும் தாய் நிலையத்தின் கீழ் இயங்குவது குறிப்பிடத்தக்கது. விளையாட்டிலிருந்து, சிறுவர் இரவுப் பாடசாலை மத நிகழ்வுகள், பொது நிகழ்ச்சிகள் எனப்பல சமூகசேவை நிகழ்வுகள் நடைபெற்றன, நடைபெறுகின்றன. தற்போதைய நிர்வாகத்தினர் திறமையாகவும், செயல் ஊக்கத்துடனும் செயல்பட்டு சங்கத்தை வழிநடத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது.

கொண்டாடப்படும் 65ம் ஆண்டு விழா சீராகவும், சிறப்புடனும், ஒற்றுமையுடன் நடைபெற பாதுகாவலராக இருந்து ஆசீர்தருவார். இது உண்மை இந்த ஆண்டு விழா சிறக்க என்னுடைய ஆசிகள் பல பல.

**மரிசலீன் மரியதாஸ்**
*முன்னாள் தலைவர்*
*சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம்*

# பயணம் தொடர வாழ்த்துக்கள்



புனித நீக்கிலஸ் சனசமூக நிலையம் தன் தூர நோக்கை 65 வருடங்களாக நிறைவடையச் செய்து விழா எடுக்கும் இந்நாளில், வளர்ச்சிக்காய் உழைத்து அனைத்து பழைய மற்றும் புதிய உறுப்பினர்களுக்கும் ஊர் மக்களுக்கும் எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

நம் ஊரில் பெருமைகளை பலர் ஈட்டியுள்ளார்கள். அந்த வகையில் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம், இளையோரின் ஆற்றல் திறமைகளை ஆற்றுப்படுத்துவதில் மட்டுமன்றி, நம் ஊரில் வாழும் மாணவர்கள் கல்வியில் உயர, பல முயற்சிகளை எடுத்தும் வருவது பாராட்டத்தக்கது. சமூக மேம்பாட்டிற்காக இவர்கள் இச்சனசமூக நிலையத்தினூடாக பல முயற்சிகளை செய்து வருவதையும் அறிந்திருக்கின்றேன்.

செய்வதின் உட்பொருள் கண்டு, ஊரின் முன்னேற்றத்திற்காக, செய்யக்கூடிய அனைத்தையும் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் செய்யுங்கள், வெற்றியின் இலக்கை நோக்கி, ஓடிக்கொண்டேயிருப்பார்கள். எதிர்கால சமுதாயம் கல்வியில் சிறந்தோங்கி பெருமைகள் பல சேர்க்க, விளையாட்டும் இணைந்திருக்கட்டும். மனித நேயப் பண்புகள் அருகிச் செல்லும் இக்காலத்தில் விளையாட்டிலும் விழுமியங்களை பாதுகாருங்கள். நம் முன்னோரின் வழிநின்று நல்லவைகளை பாதுகாக்க கடினப்பட்டு உழையுங்கள். அனைத்திலும் அன்பே நம்மை வழிநடத்திச் செல்லட்டும்.

65 வருட விழாவின் நிறைவில், பணிகளை மீளாய்வு செய்வதும், காலத்திற்குரிய நம் ஊருக்குரிய, புதிய பணிகளை கண்டுபிடிப்பதும் நம் எல்லோருடைய பொறுப்பாகும். சனசமூக நிலையம் இன்னும் பல ஆண்டுகள் முன்னேறிச் சென்று நற்பணிகள் பல ஆற்ற இறைவனைப் பிரார்த்திப்பதோடு இன்நந்நாளில் விழாக்குழு உறுப்பினர்களை நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றேன். புனித நீக்கிலாரின் பரிந்துரை அனைத்துச் செயல்களையும் நிறைவு செய்வதாக!

*இறையாசீருடன்*
**அருட்திரு. அ.அமலதாஸ் (அமலன்), அ.ம.தி**
*பங்குமகன்.*



2014ம் ஆண்டு மகாத்மா விளையாட்டு கழகம் நடாத்திய 5 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில்
1ம் இடம் (நிர்வாகத்தினருடன்)

# கிராம அலுவலரின் வாழ்த்து



சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் தனது 65 வது விழாவினை வெகுவிமரிசையாகக் கொண்டாடும் வேளை வாழ்த்துச் செய்தியினை வழங்குவதனை ஒட்டி மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். "நாவாய்யுர்" என்ற பெயர் மருவி நாவாந்துறையாகியது. கடல் வளத்தினை தன்னகத்தே கொண்டது. கலை தொடர்பான திறன் கொண்டவர்கள், தொழில் வளம் செழிக்கப் பெற்றவர்கள், இப்பகுதியில் அதிகம் உள்ளார்கள். இவ்வாறு பௌதீக வளம் மற்றும் மனிதவளம் என்பவற்றினை ஒன்றிணைக்க "சென்நீக்கிலஸ் சனசமூகநிலையம்" கரம் பிடிக்கப்பட்டு, சமூகத்தின் பல துறைகளினை ஒன்றிணைந்து விளையாட்டு வீரர்களினை உருவாக்கியது. யாழ் மாவட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களினை உருவாக்கிய பெருமை இச்சனசமூக நிலையத்தினைச் சாரும். சமூக மட்ட முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு தன்னை முழுமையாக இணைத்து பாடுபடுவதுடன் மதம் சார்ந்த செயற்பாடுகள், கல்விச் செயற்பாடுகள், பெண்கள், சிறுவர் அபிவிருத்தி என்ற வேலைத்திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து "மனிதம்" என்ற எண்ணக்கரு மிளிர கை கொடுக்கின்றது. தலைவன் ஒருவரின் கீழ், அவனது வழி காட்டலின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பாடுகளினை செவ்வனே நிறைவேற்றுவது இச்சமூக நிலையம் வெற்றியடையக் காரணமானது.

"சேவை செய்வதே ஆனந்தம் அதனை திறம்படச் செய்வதே பேரானந்தம்" என்ற தொனிப் பொருளினை மையமாக வைத்து செயற்பட்டு சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் அனைவரின் பாராட்டினைப் பெற்றுவிட்டது.

**அ.சர்வேஸ்வரன்**
*கிராம அலுவலர்*
J/ 84, நாவாந்துறை தெற்கு.

# நாவாந்துறை ப.நோ.கூ. சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி

புனிதரின் நாமத்தைக் கொண்டு யாழ் நகரில் சிறந்த நிர்வாகத்தினைக் கொண்டு சமூகப்பணியில் தன்னகத்தே கொண்டுள்ள மக்களுக்கு சமூகப்பணியாற்றி வெற்றிநடைபோட்டு 65வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் புனித நீக்கிலார் சனசமூக நிலைய நிலையத்தினரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

மக்கள் குழாமினை ஒன்றிணைந்து அவ் மக்களின் அனைத்து தேவைகளிலும் நின்று உழைக்கும் அமைப்பே சனசமூக நிலையமாகும். இவ்விடையத்தில் புனித நீக்கிலார் சனசமூக நிலையம் சிறப்பாக இயங்கி 65வது ஆண்டு விழாவை கொண்டாடுவது போற்றுதற்கு உரியதாகும் என்பதனை யாரும் மறக்கமுடியாது.

புனித நீக்கிலார் சனசமூக நிலையம் கலை, கலாச்சாரம், ஒழுக்கநெறிகள் விளையாட்டுக்களின் மூலம் வெற்றிகள் நிலையத்தின் உட்கட்டுமாணப் பணிகள், கல்வி கற்பித்தல், பொருள் உதவி, உடல் உழைப்பு. பிறர் அன்புப்பணிகள், பிற சமூக உறவுநிலை பேணல், ஆலயங்கள் சார்ந்த பணிகள், மகளிர் இளைஞர் வளர்ச்சிப்பாதையில் ஈடுபாடு, சிறார்கள் மட்டில் அக்கறை, சமூக முதியோர் மீது கரிசனை, தன் சமூக மக்களினை ஒன்றிணைத்து பொது விடயங்களை நடாத்துதல் போன்ற அனைத்து விடயங்களையும் ஆற்றி 65வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவது பெருமைக்குரியது.

புனித நீக்கிலார் சனசமூக நிலையம் 65வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவது மகிழ்விக்கும் விடயம் ஆகும். அதேவேளை இன்று 65வது ஆண்டில் காலடிபதிக்கும் நிலையத்திற்காக சமூகப்பணியாற்றிய சமூகத்தலைவர்களையும் நிர்வாகிகளையும் மறந்துவிடமுடியாது. அவர்களின் தியாகங்கள் அர்ப்பணிப்புக்கள் வியர்வைத்துளிகள் அவர்களின் பொருளுதவி உடல் உழைப்பு அவர்களின் தொடர்ச்சியான சமூகப்பணியில் மக்களையும் இணைத்துக்கொண்டு கடந்துவந்த காலங்களில் ஆற்றிய பணியின் வெளிப்பாடே இந்த நிலையத்தின் 65வது ஆண்டு விழாவின் மகிழ்ச்சிக்கு அடிநாதம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அத்துடன் இந்த நிலையத்தின் ஆண்டு விழாவிற்கு எங்களின் வாழ்த்துச் செய்தியினையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமை அடைகின்றோம். அத்துடன் இந்த நிலையமானது பல ஆண்டு விழாக்களைக் காணவேண்டும் என்று கூறி வாழ்த்தி நிற்கின்றோம்.

**நீ.பிரபாகரன் – தலைவர்**
**அ.தயான் – செயலாளர்**
*ப.நோ.கூ.சங்கம்*
*கிளை இல 01.*



உதைபந்தாட்டப்போட்டி ஒன்றில் வெற்றிபெற்றபோது..



உதைபந்தாட்டப்போட்டி ஒன்றில் வெற்றிபெற்றபோது..


www.jaffnafootball.com



# யாழ். சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் 65வது ஆண்டு அகவைநிறைவில் வாழ்த்துச்செய்தி

"நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!" (எபே 1:2)

கடல் அலைகள் தாலாட்டும் இலங்கைத் தீவின் வடபுலத்தின் மேற்குக்கரையில் அன்னையவள் ஆசிபெற்று, போர்த்துக்கீச காலந்தொட்டு ஆயராம் புனித சன்நீக்கிலாவு மாமுனிவர் கொலுவீற்றிருந்து அருளாசி பொழியும் நாவாந்துறையூரின் நடுக்கண் அமையப்பெற்று, காலத்தால் நற்பணியாற்றி வருகின்ற, எமது ஒன்றிப்பின் மையமாகிய சென் நீக்கிலஸ் சனசமூக அமைப்பானது, நீண்டகால வரலாற்றுப் பின்னணியினைக் கொண்டது. 06.11.1949 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு Reg.No.J/23 எனும் இலக்கத்தை தனது பதிவு இலக்கமாகக் கொண்டுள்ளது. இருப்பினும் அதன் தோற்றமும் வளர்ச்சியும், செயற்பாடுகளும் அதனிலும் பல வருடங்கள் காலத்தால் முந்தியதென வாய்மொழிப் பாரம்பரியத்தின் ஊடாகவும், பிற ஆவண ஆதாரங்களினூடாகவும் அறிய முடிகிறது. அந்தவகையில் அன்று தொடங்கி இன்றுவரை அது கண்ட வளர்ச்சியின் அனுகூலங்களை நம் கிராமம் அனுபவித்து வருகின்றது. அதன் பல்வேறு சமூக, பொருளாதார, கலை, கலாசார, சமயப் பணிகளை அதன்கீழ் செயற்படும் சென் நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம், இளைஞர் கழகம், சிறுவர் கழகம், மகளிர் மன்றம், மாதர் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம், முதியோர் சங்கம், கலைக்குழு, இரவுப்பாடசாலை போன்ற கிளைகளினூடாக தாய்ச்சங்கத்தின் வினைத்திறனையும், அதன்வழி சமூகம் பெறும் விளைத்திறனையும் கோடிட்டுக் காட்ட முடிகின்றது. அந்தவகையில் அதன் வளர்ச்சிப் பயணத்தில் காத்திரமான சேவையாற்றிய எம்மவர்கள் அனைவரையும் இருகரம் கூப்பி வாழ்த்துகின்றோம். நன்றி கூறுகின்றோம். மேலும் "Get together means beginning top improve for a final victory" அதாவது

"ஒன்றுகூடல் என்பது ஆரம்பம்
ஒன்று இணைதல் என்பது வளர்ச்சி
ஒன்று இணைந்து செயற்படல் என்பது வெற்றி"

எனும் Henry ford எனும் சமூகவியலாளரின் கருத்தினை உள்வாங்கி இன்றுபோல் என்றும் எம் சமூகம் வெற்றிபெற்றதாக விளங்க இறைவனை ஆசித்து, இவ்வாறு வரலாறுகளை ஆவணப்படுத்தி "சிறப்பு மலரினை" வெளியிட இந்த நிர்வாகம் மேற்கொண்டுள்ள அனைத்து முயற்சிகளையும் பாராட்டி உற்சாகப்படுத்துவதோடு, ஆயராம் புனித நீக்கிலார், புனித வின்சென்ற் டீ போல், அருளாளர் பிரெட்றிக் ஓசானம் இவர்களின் பரிந்துரைகள் வழியாக இறைவனின் பாதுகாப்பையும், துணையையும் பெற்று எம் சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் இன்று போல் என்றும் நிலைத்து நற்பணிபுரிவதுடன், மாறும் உலகின் புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து செயற்படவும் இவ் 65 வது அகவையில் வெகுவாகப் பாராட்டி ஆசித்து வாழ்த்துகின்றோம் நாம்.

**புனித வின்சென்ற் டீ போல் சபை**
*புனித நீக்கிலார் பந்தி,*
*நாவாந்துறை.*

# வெளிநாட்டில் வாழும் நாவாய் மக்கள்

எமது புனித நீக்கிலார் ச.ச. நிலையம் 06.11.1949 ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு 65 ஆண்டுகள் நிறைவுற்று 66 ஆண்டில் காலடி பதிக்கின்றதை நினைத்து பிரான்ஸ் வாழ் நாவாந்துறை புனித நீக்கிலார் சமூக மக்களும் புலம் பெயர் வாழ் புனித நீக்கிலார் மக்களும் பெருமை கொள்கின்றோம்.

கடந்த 65 ஆண்டுகளாக எமது ச.ச.நிலையத்தை எந்த ஒரு ஆபத்தும் இல்லாமல் பாதுகாத்துத் தந்தமைக்கு எமது பாதுகாவலரான புனித நீக்கிலாருக்கு நன்றியைக் கூறுகின்றோம்.

எமது ச.ச.நிலையம் 06.11.1949 தொடங்கி வைத்தமைக்காக எமது முன்னோர்களுக்கு இரு கரம் கூப்பி உள் மனதிலிருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்கள் எமக்காகத் தந்த விலை மதிப்பில்லாத சொத்தை உருவாக்கித் தந்ததை நினைத்து பேருவகை கொள்கின்றோம். எமது சமூகத்தின் முதுகெலும்பாக புனித நீக்கிலார் ஆலயமும் புனித நீக்கிலார் சனசமூக நிலையமும் உள்ளது. இந்த ச.ச.நிலையமானது கடந்த 65 ஆண்டுகளில் கல்வி கலை, கலாச்சாரம், பண்பாடு, ஆன்மீகம், விளையாட்டு, தொழில் என சகல துறைகளிலும் எத்தனையோ வித்துவான்கள் ஆன்மீகவாதிகள் தொழிலாளர்கள் என எல்லாத்துறைகளிலும் வளர்த்த பெருமையை எம் பங்கு கொண்டுள்ளது. எமது ச.ச. நிலையத்தை கடந்த 65 ஆண்டுகளாக நிர்வகித்த நிர்வாகிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதைப்போன்று இனிவரும் காலங்களிலும் எமது ச.ச. நிலையத்தை சிறப்பான முறையில் ஒற்றுமையுடன் நிர்வகிப்பதன் மூலம் இன்னும் பல கல்விமான்கள், வீர வீராங்கனைகள், ஆன்மீக வாதிகள், தலைவர்கள் என எல்லாத் துறைகளிலும் எமது சமூகத்தை வளர்த்தெடுக்க முடியும் என நம்புகின்றோம். இந்த சிறப்பான பொன்னாளில் எமது சமூக மக்களும் புலம் பெயர் வாழ் புனித நீக்கிலார் சமூக மக்களும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

**புனித நீக்கிலார் பங்குமக்கள் ஒன்றியம்,**
*பிரான்ஸ்.*



புனித வின்சென்ற் டி போல் சபை




மரியாயின் சேனை

# சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின்
# 65 வது அகவை நிறைவினில் 06.11.1949 - 06.11.2014
# செயலாளரின் இதயத்திலிருந்து




கடலும் கரையும் சங்கமிக்கும் அழகிய நாவாய் துறையூரில் கடலலையும், காற்றும் இறைநாமம் புகழும் பதிதனில், புனித நீக்கிலார் முனிந்திரன் பவனி வருகின்ற பாதையிலே மங்கா ஒளி வீசி மக்கள் பணிபுரிகின்ற எமது சென்நீக்கிலஸ் சனசமூக நிலையமானது தனது 65வது அகவையில் மகிழ்ந்து நிற்கும் இந்நாள் செயலாளர் எனும் ரீதியில் எனக்கும் மிகமிக மகிழச்சி தரும் நாளாகவேயுள்ளது. செயலாளர் என்ற வகையில் பலவற்றையும் இங்கு குறிப்பிட்டு நன்றி சொல்ல வேண்டிய தேவையும் எனக்குள்ளது. கடல் சூழ்ந்து கண்ணாக்காடு கொண்ட இப்பகுதியை மண் கொண்டு கடல் நிரவிக் காடழித்து, அழகு தரும் கட்டடங்களும், மைதானமும், பூஞ்சோலையும் கொண்ட வளமிக்க பகுதியாக மாற்றிய பெருமை எம் மூதாதையரேயே சாரும் எனவே அவர்கள் ஒவ்வொருவரினதும் மகத்தான சேவையையும், அர்ப்பணிப்பினையும் நன்றியுடன் முதலில் நினைவில்க் கொள்ளுகின்றேன்.அதேபோல நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்திற்கு சொந்தமான இந்த நிலையத்தோடு இதுவரை பயணித்து வந்த ஒவ்வொரு அன்புள்ளங்களையும் உள்ளூரை சேர்ந்தவர்களாயினும் சரி வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாயினும் சரி மனதாரப் பாராட்டி நன்றி சொல்கின்றேன். மேலும் சென்நீக்கிலஸ் வி. கழகம், இளைஞர் மன்றம், மகளிர் மன்றம், மாதர் சங்கம், கடற்தொழில் சங்கம், சிறுவர் கழகம், முதியோர் கழகம், கலைக்குழு, இரவுப்பாடசாலையென தாய்ச்சங்கமாக இது இருந்து நிர்வகிக்கும் உப அமைப்புக்களும், அவற்றின் சேவைகளும் மிகப்பல, எனவே இவ்வேளையில் இவ் உபஅமைப்புக்களையும், அவைகளின் உயரிய சேவைகளையும் அவைகளின் நிர்வாகிகளையும், அவர்கள் தாய்ச்சங்கத்திற்கு தருகின்ற வெகுவான ஒத்துழைப்பினையும், பலத்தையும் நன்றியோடு பாராட்டுகின்றேன். அதேவேளையில் "சமூகம் என்பது தனக்குரியவற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்ற அமைப்பு" என்பார்கள். அந்தவகையில் எமக்குரியதான கல்வி, கலை, கலாச்சார, சமூக விழுமியங்களையும், அறிவு திறனுடன் கூடிய நல் மனப்பாங்கினையும் அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கக் கூடிய உயரிய வேலைத்திட்டத்தை பொறுப்புடன் ஆற்ற எம் இளைஞர்களுக்கு அழைப்பு விடுகின்றேன்.

மேலும் இவ் இனிய நிறைவின் நன்நாளிலே இவ் "சிறப்பு மலரினை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த எமது நிர்வாகத்தினருக்கும், எம் உப அமைப்புக்களுக்கும் எம் சென் நீக்கிலஸ் சனசமூக நிலைய மக்களுக்கும், வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களுக்கும், ஏனைய நலன் விரும்பிகள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகள் மேலும் இச் சிறப்பு மலருக்கு குறுகிய காலத்தில் ஆசிச் செய்திகள் வாழ்த்துச் செய்திகள் மற்றும் ஆக்கங்களைத் தந்துதவிய ஒவ்வொருவருக்கும் நன்றிகள். இவ் நூலினை அழகுற அமைத்து தந்த ஒவ்வொருவருக்கும் அதேபோல உதவிகள் கேட்டு சென்றபோது இல்லை என்று சொல்லாமல் மனம் கோணாமல் தளரா மனத்துடன் பண உதவி, பொருள் உதவி நல்கிய ஒவ்வொருவரையும் நன்றியுடன் நினைவில்க் கொள்ளுகின்றேன். மேலும் இந்த 65 ஆவது அகவையின் நாள் சிறக்க இலைமறை

காயாக இருந்து செயற்பட்ட ஒவ்வொருவரையும், மேலும் இவ் நிலையத்தை புனரமைப்புச் செய்ய உதவிய ஒவ்வொருவரையும் நன்றியுடன் நினைத்து பாராட்டி நன்றி கூறுகின்றேன். ஈற்றில் எம் நிலையத்தின் வளர்ச்சி தொடர்ந்து ஓங்கவும், எப்போதும் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கவும், இன்று போல் என்றும் ஒற்றுமையுடன் வாழவும், ஒருவரை ஒருவர் அன்பு செய்யவும் "மன்னிப்போம் மறப்போம்" என்ற தத்தவத்துக்கு அமைய அனைவரையும் ஏற்றுக்கொண்டு வாழவும் புனித நீக்கிலாரின் பரிந்துரை வழியாக இறைவன் துணை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்து இவ்வினிய வாய்ப்பிற்கு நன்றி கூறி எம் சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம் குன்றா மகிமையுடன் கலங்கரை விளக்குப் போல என்றும் ஒளிர பல் துறைகளிலும் மிளிர இறையாசி வேண்டி நிற்கின்றேன். வாழ்க வாழ்க பல்லாண்டு வளமுடன் வாழிய வாழிய வாழியவே.

**இ.வில்சன்**
*செயலாளர்,*
*சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம்.*



2002 ம் ஆண்டு யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட
உதைபந்தாட்ட போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட சென்.நீக்கிலஸ் அணி வீரர்கள்.





மெகா பதிப்பகம், கச்சேரியடி, யாழ். தொ.பே : 021 753 8305